THE HON. THIRU S. MADHAVAN : (a) No Sir.

(b) Does not arise.

THIRU N. DENNIS : Sir, in view of the large amount of foreign exchange likely to be earned, may I know whether the Government would take steps for the exploration of these Mushrooms ?

THE HON. THIRU S. MADHAVAN : Sir, we are not doing any export business. The Government of India have been doing it. In 1969–70 it was to the tune of Rs. 38 lakhs and odd and in 1971–72 Rs. 30 lakhs and odd.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் காளான் உற்பத்தி மிகச் சிறப்பாக இருக்கிறது. அங்கே அரசுத் துறையில் ஒரு தொழிற்சாலை நிறுவி, அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட செயற்குறிப்பு இருப்பதாக என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தனிப்பட்ட நபர்கள் காளானை மிகப்பெரும் அளவில் பயிர் செய்கிறார்கள் என்பதாகத் தகவல் இருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் காளான் உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது என்பதால் அந்த இடத்தில் ஒரு மாதிரிப் பண்ணை வைத்து, காளான் உற்பத்தி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்கு ஏற்கெனவே பதில் சொன்னேன்.

வக்கீல் குமாஸ்தாக்களிடமிருந்து முறையீடு

* 590 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வக்கீல் குமாஸ்தாக்களுக்குக் கட்சிக்காரர்கள் கொடுக்கும் பீஸை கோர்ட்டு செலவுத்தொகையில் சேர்க்க வேண்டும் என்று வக்கீல் குமாஸ்தா சங்கங்களிலிருந்து மனுக்கள் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. THIRU S. MADHAVAN : (a) and (b) Such representations have been made from time to time by associations of vakil gumasthas, either to Government or to the High Court. The

1973 மார்ச் 31]

substance of their representation has been that the cost awarded in civil suits should also include the fee payable to registered vakil clerks. Provision has, therefore, been made in the Civil Rules of Practice for including in the cost of a suit, the cost of making copies of pleading, applications, etc. This would cover the fee of the registered clerks of the pleaders and there is therefore no need to provide for the payment of a separate fee to the clerk.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, இன்று கட்சிக்காரர்களுக்கு குமாஸ்தாக்கள் அதிக பொறுப்பு எடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் அரசினரால் இருப்பதாகத் தெரியவில்லை. வக்கீல் குமாஸ்தாக்களுக்கு என்று தனிச் சட்டம் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வக்கில்கள் மிகவும் வருத்தப் படுகிறார்கள்.

(விடை இல்லை)

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த கோர்ட் செலவானது இப்போது குறைவாக இருக்கிறது. ஆதலால் இதை இன்னும் திருத்தியமைக்க வேண்டும். கூட்டவேண்டுமென்று கருத்து இருக்கிறது. ஏனென்றால் கோர்டில் ஏற்படும் செலவிற்கும் அனுமதிக்கிற செலவிற்கும் இடைவெளி அதிகமாக இருக்கிறது. அது புனர்பரிசிலனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்னும் அதிகமாகப் போட்டால் மக்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள். இதுகுறித்து உயர்நீதிமன்றம் என்ன முடிவு செய்கிறதோ அதை ஏற்றுக்கொள்கிறோம்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, வழக்கறிஞர்களின் ஷெட்யூல் பீஸை உயர்த்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுகூட உயர்நீதி மன்றம் அல்லது பார் கவுன்சில் முடிவு எடுக்கலாம். அதைப்பற்றி பரிசீலிக்கலாம். நாமே அதுபற்றி செய்வது சரியல்ல.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, எத்தனையோ ஏழை எளியவர்களுக்கு உதவி செய்கிற அரசு, அதிகம் வருமானம் இல்லாத வக்கீல்களிடம் இருக்கும் குமாஸ்தாக்களுக்கு—அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்—ஏதாவது அரசின் மூலமாக உதவி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது அரசாங்க உதவியைப் பற்றி அல்ல. அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய பணத்தை பொதுமக்களிடமிருந்து வசூலிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்த முடியுமா என்று கேள்வி. ஆகவேதான், அதை உயர்நீதி மன்றத்தின் முடிவுக்கு விடவேண்டுமென்று சொன்னேன்.

திரு. கு. பெரியசாமி: தலைவரவர்களே, ரிஜிஸ்டர் செய்யப்பட்ட வக்கில் குமாஸ்தாக்களுக்கு அடிப்படைச் சம்பளம் நிர்ணயிக்க அரசிடம் யோசனை உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. ஏ. சுவாமிதாஸ்: சார், வக்கில்களுக்கு கட்சிக்காரர்கள் கொடுக்கிற தொகையை விட சில குமாஸ்தாக்கள் அதிகம் பெற்றுக் கொள்கிறார்கள். ஆகவே, அந்தத் தொகையையும் கோர்ட் செலவில் சேர்த்துக்கொண்டால் கட்சிக்காரர்களுக்கு அது திரும்பிக்கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த அடிப்படையில் கணக்கில் அவர்கள் பெறும் தொகையையும் சேர்த்துக் கொள்ள முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வக்கில்களையெல்லாம் கேவலப்படுத்துவது சரியல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, வக்கீல்களுக்கு கட்சிக் காரர்கள் கொடுக்கிற ஊதியத்தை விட குமாஸ்தாக்கள் அதிகமாகப் பெறுகிறார்கள் என்று கேள்வி எழுப்பப்பட்டது. பொதுவாக நல்ல வக்கீல் களுக்கு இந்தமாதிரி தகராறு ஏற்படாது. ஆதலால் அந்தமாதிரி கேள்வி தேவையில்லை என்ற கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சுவாமிதாஸ் வழக்கறிஞர் என்று கருதுகிறேன். (குறுக்கீடு) ஆசிரியரா, அப்படியானால் அடுத்த துறையைப் பற்றி நீங்கள் இவ்வளவுதூரம் சொல்லக் கூடாது

ஆயுள் தண்டனை கைதிகள்

*** 591 வினா—திரு. என். மருதாசலம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள மத்திய சிறைகளில் தற்பொழுது உள்ள ஆயுள் தண்டனை கைதிகள் எத்தனை பேர்?

(இ) அவர்களுள் மூன்றில் ஒரு பங்கு தண்டனையை அனுபவித்துள்ள வர்களை விடுதலை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?